146—

கோயம்புத்தூரில் மின்சார இரயில் விடும் திட்டம்.

*வினா எண். **15226**—*

திரு. கே.பி. ராஜு:

மாண்புமிகு போக்குரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கோயம்புத்தூரில் மின்சார இரயில் விட மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஈரோடு . கோயம்புத்தூர், எர்ணாகுளம் ரயில்பாதை மின்சாரமயமாக்குவது ஏற்கனவே மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட திட்டமாகும். இதுகுறித்து தொடக்கப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவை, இதுகுறித்து மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டும் என்பது அவசியமாகக் கருதப்படவில்லை.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் என்பது ஒரு பெரிய தொழில் நகரம். 40 இலட்சம் மக்களைக் கொண்ட ஒரு பெரிய நகரமாக இருக்கின்ற காரணத்தல் மக்கள் தொகையும் வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அங்கே போக்குவரத்து, இட நெருக்கடிகளும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, நான் கேட்டது, கோவை நகரைச் சுற்றியாவது மின்சார இரயில் விடுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா அல்லது அந்தக் கோவை நகரத்தை, கோவை மாவட்டத்தைச் சுற்றி மின்சார இரயில் விட்டு அந்தப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு மின்சார இரயிலை விட வேண்டுமென்று மத்திய அரசுக்கு இந்த அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட கேள்வி, கோயம்புத்தூர், எர்ணாகுளம் வரையிலும் மின்சார இரயில் பாதை விடப்படுமா என்று கேள்வி கேட்டு, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அமைச்சர், அவர் கேட்டது கோயம்புத்தூரில்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கோரிக்கை மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து 1993 ஆவது ஆண்டு 1992-93- வது ஆண்டு இந்தப பணிகளை மேற்கொள்ளலாம் என்று மத்திய அரசு பரிந்துரை செய்திருக்கிறது. அந்தப் பணிகள் 97-98 ஆவது ஆண்டுக்குள்ளே முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மத்திய அரசு உடனடியாகப் பரிசீலிப்பதற்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. கே.பி. ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு துவக்கப்படும் என்று அமைச்சரவர்களின் வாயிலாகப் பதில் தந்தமைக்காக நன்றி. மத்திய அரசிடம் மீண்டும் எடுத்துக் கூறி உடனடியாக இந்தக் கோவை நகரைச் சுற்றி மின்சார இரயில் விடுகின்ற திட்டத்தைத் தயவுசெய்து மீண்டும் பரிசீலனை செய்து அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசுக்கு அமைச்சர் மூலமாக வற்புறுத்துவார்களா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சென்னையிலே இருப்பதைப் போல தாம்பரம் போன்ற பகுதியிலே இருப்பதைப் போல கோவைக்கும் கொண்டு வருவதற்காகத்தான் மாநில அரசு அதைப் பரிந்துரை செய்திருக்கிறது. ஆகவே, நீங்கள் குறிப்பிடுகிற திட்டம் 92 93 ஆம் ஆண்டு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பணி முடிகின்ற தருவாய் 97 98 ஆவது ஆண்டுக்குள்ளே கோவை மாவட்டத்திலே இருக்கின்ற நரங்களில் மின்சார இரயிலை விடுவதற்கு மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று இங்கே குறிப்புகள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை 97 98 ஆவது ஆண்டில் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தெய்வத்தாய், நம்முடைய அன்புத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆசியுடனும், உங்களுடைய அன்புடனும் காமன்வெல்த் நாடுகளின் சார்பாக நாங்களெல்லாம் ஜப்பான் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய பேர் நன்றி செல்லிவிட்டார்கள். ஒவ்வொருவரும் 31 பேரும் நன்றி சொல்ல

வேண்டும் என்பது அல்ல. உங்கள் சார்பிலே எல்லோரும் சொல்லி விட்டார்கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு: சம்பந்தமான கேள்வி. ஜப்பான், மலேசியா போன்ற நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டோம். அந்த நாடுகளிலே நாங்கள் சென்ற ஜப்பானின் தலைநகரான டோக்கியோவிலேயிருந்து ஓசாகா நகரம் செல்வதற்கு 500 கிலோ மீட்டர் தொலைவுக்கு அங்கே புல்லட் ப்ரூப் என்று சொல்லப்படுகின்ற, சிறந்த வேகமான இரயில் விடப்பட்டது.

இரண்டு மணி நேரத்திலே நாங்கள் அந்த டோக்யோ நகரத்திலே இருந்து ஓசாகா நகரம் சென்றடைந்தோம். நல்ல ஏ.சி அமைப்புக்களுடன் வேகமாகச் செல்கிற அதுபோன்ற ரயில்களை நமது கோவைக்கும், சென்னைக்கும், தங்களுடைய மாவட்டமான மதுரை போன்ற பெரிய நகரங்களுக்கும் செல்வதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் வேண்டுகோளாக வைத்து, நிறைவேற்றித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மான்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளிநாடுகளுக்குப் பயணம் முடித்துவிட்டு, இன்றைக்கு இங்கே வந்திருக்கிறார். நம்முடைய இந்திய நாட்டினுடைய பொருளாதாரம் அவருக்குத் தெரியவில்லை போலிருக்கிறது. இந்திய நாட்டினுடைய இரயில் பாதைகளைச் சீரமைத்து, இரயில்களை விடுவதிலே கடினமான சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும்கூட, நம்முடைய மத்திய அமைச்சர் அவர்கள் இன்றைக்கு கர்னாடக மாநிலத்திற்கு முன்னுரிமை தந்து — அந்த மாநிலத்திலே அவர் பிறந்தவர் என்ற காரணத்தினாலே — பல்வேறு இரயில் பாதைகளை, புதிதாக வழித் தடங்களை இயக்கிக் கொண்டிருக் கிறார். அதுபோலவே, தமிழக அரசுக்கும் அதை வலியுறுத்தி, அதனுடைய பக்கத்து மாநிலமாக இருக்கிற நம்முடைய தமிழக மாநிலத்திற்கும் இரயில் பாதைகளை விரிவுபடுத்த, அதுபோன்ற நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் மேலைநாட்டிலே பிறந்திருந்தால் நலமாக இருந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகரில் மின்சார இரயில் விடவேண்டுமென்ற கோரிக்கையை, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தமிழக அரசு, எதைக் கேட்டாலும் கேட்டதைக்

கொடுத்து, தமிழக மக்கள் மீது நல்ல அன்பு வைத்திருக்கிற மத்திய அரசு நிச்சயம் இந்தத் திட்டத்திற்கும் நிதியொதுக்கும். மத்திய அமைச்சகத்தின் பிரதம அமைச்சர் அவர்கள், தமிழக மக்கள் மீதும், தமிழக அரசு மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளார். அதன் அடிப்படையில், இந்தத் திட்டத்தைச் சீராகச் செயல்படுத்துவதற்கு, நீங்கள் நேரடியாகச் சென்று அணுகுவீர்களேயானால், நிச்சயம் இந்தத் திட்டம் கோவை நகரில் வாழ்கிற 40 இலட்சம் மக்களுக்கும், கோவை நகருக்கு தினசரி வந்து செல்கிற, வியாபார ரீதியாக வந்துசெல்கிற மக்களுக்கும், நெரிசல்களில் சிக்காமல் குறிப்பிட்ட நேரத்தில், நேரத்தை வீணாக்காமல் வந்து செல்வதற்கு வசதியாக, மின்சார இரயில்கள் விடுவதற்கு, இரயில் பாதைகளைத் துவக்குவதற்கு நீங்கள் நிச்சயம் மத்திய அரசை அணுகி, அனுமதி பெற்றுத் தருவீர்களா எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நம்பிக்கையோடு இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 147, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

147—

சிவகாசியிலிருந்து பெங்களூருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுதல்.

***21503**—*

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியிலிருந்து பெங்களூருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு கே.ஏ.செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இத்தகைய திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித்தலைவி ஆட்சியிலே இல்லை என்ற வார்த்தைக்கே இடமில்லை